திருச்செந்தூர் பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 92—திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்செந்தூர் பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இதற்கான நிலம் திருச்செந்தூர் ஒன்றியம் கொடுத்துள்ளது. உத்தேச வடிவ அமைப்பிற்கு திருநெல்வேலி நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர் அனுமதி வழங்கியுள்ளார். இப்பணியை செய்து முடிக்க ரூ. 7·5 இலட்சம் செலவாகும் என திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு தயார் செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் நுட்ப அனுமதிக்காக அனுப்பப்பட்டது. இதற்கான செலவிற்கு அரசிடம் கடன் பெறலாம் என முதலில் உத்தேசிக்கப்பட்டது. இதற்கிடையில் ஒருங்கிணைந்த நகர திட்டத்தின் கீழ் கடன் உதவி பெறலாம் எனக் கருதி தக்க நடவடிக்கை மாவட்ட ஆட்சித்தலைவர் எடுத்து வருகிறார்.

தன்னிறைவு திட்டத்தின்கீழ், மதுரை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சிகள்.

*வினா எண். 93—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு தற்கு 1981–82 ஆம் ஆண்டுக்கு மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலம், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 1981–82 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

(ஆ) கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் நடப்பாண்டிலிருந்து தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும். ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டம் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் விரிவாக்கப்படவுள்ளது.